Under Section 173 BNSS

9/K/DY 14/8/24

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.வி.மு.ச. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165162

1. District : Thiruvallur PS: V&AC, Year: 2024 FIR No.: 13/AC/2024/TUL Date: 14.08.2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: BNSS, Sections பிரிவுகள்: 106 BNSS,
(ii) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்: Sec. 7 & 12 of the
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: prevention of corruption
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : (Amendment) Act 2018.

3. (a) Occurrence of Offence Day : Date from : 13.08.2024 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Between 15.45hrs to 23.45hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 14.08.2024 Time : 03.00hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 14.08.2024 Time : 03.00hrs & 04.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: West - about 40 kms.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Thiruttani Motor Vehicle Inspector office, Laxmapuram, Thiruvallur Dt.,
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. D. Natchimuthu (b) Father's/ Husband's Name : Dharmaraj
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : Age: 49 yrs (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Tahsildar (g) Address : I/c District Deputy Inspection cell officer, Kanchipuram, Chengalpattu & Thiruvallur Districts, Thiruvallur.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars: (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tmt. Rajarajeshwari, Motor Vehicle Inspector Grade-1, i/c Thiruthani, (2) Tr. S. Rukesh A/28 S/o Ravichandran, Data Entry operator, MVI office, Thiruthani (3) Tr. S. Prakash A-21, DEO, Gummidipoondi (4) Tr. S. Bharani A/52, S/o Subramani, Thiruthani.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Based on the result of Joint Surprise check conducted.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Seized un accounted money Rs. 146250/- durin the Joint Surprise check.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து அனுப்பப்படுகிறது. இன்று 14.08.2024 ம் தேதி அதிகாலை சுமார் 03.00 மணிக்கு S. மாலா காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அவர்கள், திரு. D. நாச்சிமுத்து, துணை வட்டாட்சியர்/கண்காணிப்பாளர் நில வரி (CPRR unit-2) திருவள்ளூர் என்பவர் கொடுத்த புகார், திடீர் சோதனையின் செயல்முறை ஆணை, கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத லஞ்சமாக பெறப்பட்ட பணம் ரூ. 146250/-, கைவிட்ட கிப்ட் பேக்கிலிருந்த 224.940 கிராம் எடை கொண்ட வெள்ளி விநாயகர் சிலை மற்றும் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும் என்னிடம் கொடுத்து அதன்மீது வழக்கு பதிவு செய்ய எனக்கு அளித்த உத்தரவின்பேரில், ஆவணங்-களை சரிபார்த்து வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS......................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 14/8/2024

S. Mala 14/8/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.08.2024 at 06:00hrs.

Name: பெயர் S. MALA.
Rank: நிலை ..................No. எண் ..........
Inspector of police, VAC, Thiruvallur.

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

அனுப்புநர். திரு.D.நாச்சிமுத்து. துணை வட்டாச்சியர்/கண்காணிப்பாளர். நில எடுப்பு (CPPR Unit-2) திருவள்ளூர் மற்றும் (கூடுதல் பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். காஞ்சிபுரம். செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு. திருவள்ளூர். **ந.க.எண்.136/2024/A1, நாள்:-13.08.2024** அய்யா, பொருள்:- திடீர் ஆய்வு - திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் - திடீர் ஆய்வு - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை துணை கண்காணிப்பாளர் திருவள்ளூர் அவர்களுடன் கூட்டாய்வு மேற்கொண்டது. பார்வை - எனது செயல்முறைகள் ந.க.எண்.136/2024/A1, நாள்:-13.08.2024. 13.08.2024-ஆம்தேதி மாலை 15.45 மணி முதல் இரவு 23.45 மணி வரை திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தினை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.இராஜராஜேஸ்வரி அவர்களின் காரை ஓட்டிவந்த ஓட்டுநர் திரு.பிரகாஷ் அவர்களிடமிருந்து ரூ.11,500/-யும், ஷீமா ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் ஓட்டுநர் பயிற்சியாளர் திரு.பரணி அவர்களின் வலதுப்பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.10,950/- மற்றும் அவருடைய கார் Maruti Swift TN 21 BY 0635-ல் வைத்திருந்த பணம் ரூ.1,23,800/- ஆக மொத்தம் பணம் ரூ.1,46,250/-த்தை ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காகவும், உரிமம் புதுப்பித்தல், வாகன தகுதி சான்று, பொது பணிவில்லை (Batch) பெறுவதற்காக வரும் பொதுமக்களிடம் இருந்து அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் தவிர்த்து கூடுதலாக பெற்ற பணம் எனக்கருதி பார்வையில் கண்ட செயல்முறைகளின்படி கைப்பற்றப்பட்டது. மேலும், 224.910 கிராம் எடையுள்ள வெள்ளியிலான முருகர் சிலை மற்றும் 05.07.2024 தேதியிட்ட Tax Invoice அசல், With Best Wishes லேபிள் ஒட்டப்பட்ட வைலட் கலர் கிப்ட் பேக் கவர்-1 மற்றும் JAI GURU JEWELLERS கட்டப்பை ஒன்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட தொகை மற்றும் இதர ஆவணங்களையும் இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைத் தொடர தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள Sdxxxதிரு.D.நாச்சிமுத்து, துணை வட்டாச்சியர்/கண்காணிப்பாளர், நில எடுப்பு (CPPR Unit-2) திருவள்ளூர் மற்றும் (கூடுதல் பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். 13.08.2024. இணைப்பு -1) ரொக்கம் ரூ.1,46,250/- 2) 224.910 கிராம் எடையுள்ள வெள்ளி முருகர் சிலை மற்றும் 05.07.2024 தேதியிட்ட Tax Invoice அசல், With Best Wishes லேபிள் ஒட்டப்பட்ட வைலட் கலர் கிப்ட் பேக் கவர்-1 மற்றும் JAI GURU JEWELLERS கட்டப்பை ஒன்று, 3) செயல்முறை அசல் மற்றும் செயல்முறை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி ஆவணங்கள், 4) கைப்பட எழுதிக்கொடுத்த விளக்க கடிதங்கள்-5 மற்றும் வாக்குமூலங்கள்-5. மேற்படி கடிதத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.E.இராமச்சந்திரமூர்த்தி அவர்கள் வழக்கு பதிவு செய்யவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தி எனக்கு அவரால் எழுதப்பட்டு கையொப்பம் (14.08.2024) செய்யப்பட்டது. மேலும், மேற்படி திடீர் கூட்டுத்தணிக்கை சோதனையின்போது மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் தயார் செய்யப்பட்ட செயல்முறையின் விவரம் வருமாறு- மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், இலட்சுமாபுரம், திருத்தணி-631204, திருவள்ளூர் மாவட்டம் என்ற அலுவலகத்தில் நடைபெற்ற திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறைகள் ந.க.எண்.136/2024/A1. நாள்:- 13.08.2024. பொருள்:- திடீர் கூட்டாய்வு- திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - திருத்தணி - மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் - 13.08.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது- தொடர்பான - செயல்முறைகள். திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காகவும், உரிமம் புதுப்பித்தல், வாகன தகுதி சான்று, பொது பணிவில்லை (Batch) பெறுவதற்காக வரும் பொதுமக்களிடம் சட்டவிரோதமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இன்று 13.08.2024-ஆம் தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டு தணிக்கை செய்ய மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலகர் திரு.D.நாச்சிமுத்து, துணை வட்டாச்சியர்/கண்காணிப்பாளர், நில எடுப்பு (CPPR Unit-2) திருவள்ளூர் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.மு.இ.இராமசந்திரமூர்த்தி, காவல் ஆய்வாளர் திருமதி..S.மாலா மற்றும் விஜிலென்ஸ் குழுவினர்கள் இணைந்து இருத்துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று 13.08.2024-ம்தேதி மதியம் சுமார் 13.00 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும்

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திலிருந்து இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 14.30 மணிக்கு திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு சற்று முன்பே வாகனங்களை நிறுத்திவிட்டு, குழுவினர் அனைவரும் இறங்கி நடந்து சென்று ஆங்காங்கே மறைந்து நின்று கண்காணித்துக்கொண்டிருந்தபோது மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தின் உள்ளே பொதுமக்கள் சென்று வந்துக்கொண்டிருந்தனர். சுமார் 15.45 மணியளவில் குழுவினருடன் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றபோது, அலுவலகத்தின் வாராண்டாவில் மற்றும் வாசலில் நின்றுக்கொண்டிருந்த பொதுமக்கள் அனைவரையும் குழுவினர் உதவியுடன் அலுவலகத்தில் அழைத்து வந்து இறைக்கையில் அமரசெய்தோம். குழுவினர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையில் இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.S.இராஜராஜேஸ்வரி, வயது-46, க/பெ.ஆனந்தன் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I கூடுதல் பொறுப்பு திருத்தணி என்பவரிடம் நான் என்னை அறிமுகம் செய்துக்கொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரை அறிமுகம் செய்து வைத்து அவர்களுடைய அடையாள அட்டையை காட்டியும், சுய பரிசோதனை செய்து காட்டியும், மேற்படி அலுவலகத்தை சோதனை செய்ய வந்திருப்பதான தகவல் தெரிவித்து ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், அலுவலகத்தில் ஆஜரில் இருந்த உதவியாளர் திருமதி.J.கோமதி, இளநிலை உதவியாளர் திரு.V.வரபிரசாதரெட்டி மற்றும் ஒப்பந்த பணியாளர் திரு.R.ரூகேஷ் ஆகியோரிடமும் அறிமுகம் படுத்திக்கொண்டு கூட்டு தணிக்கையின்போது ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் அமர்ந்திருந்த இருக்கையின் முன்புறம் இருந்த மேஜை மற்றும் அந்த அறையில் இருந்த அலமாறியை குழுவினர் உதவியுடன் மோட்டார் வாகன ஆய்வாளரின் முன்னிலையில் சோதனை செய்தபோது அலுவலக பதிவேடுகள், விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புகள் இருந்தன. அந்த அறையில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் எதுவும் இல்லை. மோட்டர் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரிக்க மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.S.இராஜராஜேஸ்வரி அவர்கள் தான் சென்னை வடக்கு செயலாக்கம் (Enforcement) பிரிவில் பணியமர்த்தப்பட்டு கூடுதல் பொறுப்பாக திருத்தணி மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய இரு அலுவலகங்களுக்கும் மோட்டார் வாகன ஆய்வாளராக

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

பணிபுரிவதாகவும். திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பில் பிப்ரவரி 2024 முதல் பணிபுரிந்து வருவதாகவும், வாரத்திற்கு இரண்டு நாட்கள் செவ்வாய் மற்றும் வியாழன் கிழமைகளில் இந்த அலுவலகத்திற்கு வந்து பணிகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். கும்மிடிப்பூண்டி அலுவலகத்திற்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி கிழமை ஆகிய நாட்களில் சென்று அலுவல்களை செய்வதாகவும் தெரிவித்தார். அலுவலகத்திற்கு வருவதற்கு தன்னுடைய கணவர் திரு.ஆனந்தன் அவர்கள் பெயரிலுள்ள Toyota Innova (TN 18 S 0222) காரை பயன்படுத்துவதாகவும். கும்மிடிப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் Data Entry ஆப்ரேட்டராக பணிபுரியும் திரு.S.பிரகாஷ் என்பவரை கார் ஓட்டுநராக அழைத்து வருவதாகவும் தெரிவித்தார். அவர் வந்த மேற்படி கார் அலுவலக போர்டிகோவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேற்படி காரை மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் குழுவினர் உதவியுடன் சோதனை செய்து பார்த்தபோது, காரில் கியர் ராடு பாக்ஸில் இரண்டு துண்டு சீட்டுகள் இருந்தது. அதனை எடுத்து பார்த்தபோது. அதில் 01.08.2024 மற்றும் 06.08.2024 ஆகிய தேதிகள் குறிக்கப்பட்டு, குறிப்புகள் எழுதப்பட்டிருந்தது. அந்த குறிப்பில் பணம் பெற்றதற்கான விவரங்கள் காணப்பட்டன. அது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டபோது, அது எவ்வாறு தனது வாகனத்தில் வந்தது என தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். மேற்படி இரண்டு துண்டு சீட்டுகளையும் வழக்கின் விசாரணைக்கு தேவையென கைப்பறிக்கொண்டேன். மேலும். மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.இராஜராஜேஸ்வரி அவர்கள் தனது குடும்பத்துடன் எண்.A3/801, Aretes Home, ஆண்டார்குப்பம், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம். பின்கோடு-600204 என்ற முகவரியில் வாடகை வீட்டில் வசித்து வருவதாகவும், தனக்கு ஒரு மகள் மற்றும் இரண்டு மகன்கள் உள்ளதாகவும், தனது கணவர் ஆனந்தன் அவர்கள் தங்களது பூர்வீகமான திருப்பத்தூர் மாவட்டம், நாட்டராம்பள்ளி தாலுக்கா, பந்தாரப்பள்ளி கிராமத்தில் இராமகிருஷ்ண நகரில் உள்ள வீட்டில் தங்கி விவசாயம் செய்து வருவதாகவும் தெரிவித்தார். அதனை அடுத்து அலுவலகத்தின் கணிணி அறையினை சோதனை செய்தபோது அதில் மூன்று கணிணி மேஜையில் கணிணிகள் வைக்கப்பட்டிருந்தது. அந்த அறையினை சோதனை செய்தபோது விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப கோப்புகள் மட்டுமே காணப்பட்டன. அந்த அறையிலும் எதுவும் கைப்பற்றக்கூடிய பொருட்கள் இல்லை. அதனை

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

அடுத்துள்ள கண்காணிப்பாளர் அறையினை சோதனை செய்தபோது, அந்த அறையில் ஸ்டீல் பீரோ ஒன்றும், கணினி ஒன்றும் இருந்தது. பீரோவினை சோதனை செய்ய அதில் அலுவலக ஆவணங்கள் இருந்தது. எனவே அந்த அறையில் எதுவும் கைப்பற்றக்கூடிய பொருட்கள் இல்லை. அதனை அடுத்துள்ள புகைப்படம் எடுக்கும் அறையினை சோதனை செய்தபோது, அந்த அறையில் புகைப்படம் எடுக்கும் பணியினை ஒப்பந்த பணியாளர் திரு.R.ரூகேஷ் அவர்கள் செய்து வருவதாகவும், அந்த அறையில் சிறிய இரும்பு பீரோவும், புகைப்படம் எடுப்பதற்கு கேமரா பொருத்தப்பட்ட கணிணியும் உள்ளது. ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவு சான்று பிரிண்ட் செய்யக்கூடிய பதிவு சான்று அட்டைகள் (Smart Card) காணப்பட்டன. திரு.R.ரூகேஷ் அவர்கள் பயன்படுத்தும் கணிணி அமைந்துள்ள மேஜையின் மீது கையால் குறிப்புகள் எழுதப்பட்டிருந்த இரண்டு தாள்கள் காணப்பட்டன. அதனை எடுத்து பார்த்தபோது, அதில் 06.08.2024, 09.08.2024 மற்றும் 13.08.2024 ஆகிய தேதிகளில் புகைப்படம் எடுக்கும்போது, அது தொடர்பான விவரங்கள் குறித்து வைக்கப்பட்டிருந்தன. இது குறித்து திரு.R.ரூகேஷ் அவர்களிடம் விசாரணை செய்தபோது மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.S.இராஜராஜேஸ்வரி அவர்கள் உத்தரவின்படி விண்ணப்பதாரர்கள் புகைப்படம் எடுக்க வரும்போது, எந்த பிரிவின் கீழ் விண்ணப்பம் செய்துள்ளார்கள் என்ற விவரமும், எந்த ஓட்டுநர் பயிற்சி பள்ளி மூலம் விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ளார் என்ற விவரங்களையும் குறித்து வைத்து அதனை உஷா ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் திரு.S.பரணி அவர்களிடம் கொடுத்துவிடுவேன் என்றும், அவர் அந்த விவரத்தின்படி மேற்படி ஓட்டுநர் பயிற்ச பள்ளி உரிமையாளர்களிடமிருந்து அதற்குறிய பணத்தினை வசூல் செய்து, மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கொடுத்து விடுவார் என்று தெரிவித்தார். மேற்படி இரண்டு தாள்களையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரணை செய்தபோது, தனக்கு ஏதுவும் தெரியாது என கூறினார். திரு.R.ரூகேஷ் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். அதனை அடுத்து, அலுவலகத்தில் முன்புற ஹாலில் அமர வைக்கப்பட்டிருந்த பொதுமக்களை குழுவினர் உதவியுடன், சுமார் 25 நபர்களை தனிதனியாக விசாரணை செய்தபோது, அவர்கள் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கும் Batch பெருவதற்கும், புதிய வண்டிக்கான பதிவு சான்று பெறுவதற்காகவும் வந்ததாக

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

தெரிவித்தனர். விசாரணைக்கு பின்னர் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். அதன் பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஓட்டுநர் திரு.பிராகாஷ் அவர்களை விசாரணை செய்ய, அவர் கடந்த நான்கு ஆண்டுகளாக கும்மிடிப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் Data Entry Operator-ஆக பணிபுரிந்து வருவதாகவும், கும்மிடிப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் பொறுப்பில் பணிபுரிந்து வரும் திருமதி.இராஜராஜேஸ்வரி அவர்கள் திருத்தணி அலுவலகத்திலும் பணிபுரிந்து வருவதால், அவர் திருத்தணி அலுவலகத்திற்கு பணிக்கு வரும்போது எல்லாம் தான் அவரது Innova Car-யை ஓட்டி வருவதாக தெரிவித்தார். அவரை குழுவினர் உதவியுடன் திரேக சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூபாய்.11,500/- இருந்தது. அதைப்பற்றி அவரிடம் விசாரிக்க சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் அப்பணம் விசாரணக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஓட்டுநர் திரு.பிராகாஷ் அவர்கள் பயன்படுத்தும் Oppo செல்போனை அவர் மூலமாக திறந்து பார்க்க 9786973117 எண்ணிற்கான Phonepay கணக்கின் பண பரிவர்தனைகளில் சிலவற்றை ஆய்வு செய்தபோது ஆனந்தன் சார் மேடம் என்ற பெயரிலுள்ள 7639419794 என்ற எண்ணிற்கு 17.07.2024-ம்தேதி ரூ.50,000/- மற்றும் ரூ.50,000/- என மொத்தம் ரூ.1,00,000/- அனுப்பப்பட்டிருந்தது. இது குறித்து ஓட்டுநர் திரு.பிரகாஷ் அவர்களிடம் விசாரித்தபோது, கும்மிடிப்பூண்டி பகுதியில் புதியதாக இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களை விற்பனை செய்யும் டீலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளருக்கு கொடுக்கவேண்டிய பணத்தினை தன்னுடைய Phonepay கணக்கு எண்ணிற்கு அனுப்பி வைப்பார்கள் என்றும், அதனை மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.இராஜராஜேஸ்வரின் அவர்களின் உத்தரவின்பேரில் அவரது கணவர் திரு.ஆனந்தன் என்பவரின் கணக்கிற்கு Phonepay மூலம் 7639419794 என்ற எண்ணிற்கு அனுப்பியதாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கேட்டபோது, தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். மேலும் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த ஊீமா ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் ஓட்டுநர் பயிற்சி அளிப்பவராக பணிபுரிவதாக கூறும் திரு.S.பரணி அவர்களை விசாரணை செய்தபோது, தான் ஓட்டுநர் பயிற்சியின் மூலமாக ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காக விண்ணப்பம் செய்துள்ள நபர்களை டெஸ்டுக்காக அலுவலகத்திற்கு அழைத்து வந்ததாக

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

தெரிவித்தார். அவரை குழுவினர் உதவியுடன் தேக சோதனை செய்தபோது. அவருடைய சட்டையின் மேல் பாக்கெட்டில் 08.08.24 என்ற தேதியிட்ட துண்டு சீட்டு இருந்தது. அந்த துண்டு சீட்டை பார்வையிட்டபோது. பணம் சம்பந்தமான கையால் எழுதப்பட்ட குறிப்புகள் காணப்பட்டன. அந்த துண்டு சீட்டில் இருந்த கையெழுத்துக்கள் தன்னால் எழுதப்பட்டது என தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.S.இராஜராஜேஸ்வரி அவர்கள் பயன்படுத்தும் வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு துண்டு சீட்டுகளிலும். திரு.S.பாணி அவர்களால் எழுதப்பட்ட கையெழுத்துகள் காணப்பட்டன. மேலும், அவருடைய பேண்டின் வலது பாக்கெட்டில் அவரிடம் ரூபாய்.10,950/- இருந்தது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது. மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுடைய உத்தரவின்பேரில். அவர்களால் ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படும் வாகனங்கள். வழங்கப்படும் ஓட்டுநர் உரிமம். பேட்ச். வாகன பதிவு சான்றிதழ் குறித்த விவரங்களை அந்த அலுவலகத்தில் Data Entry Operator-ஆக பணிபுரியும் திரு.ருகேஷ் என்பவர் கொடுக்கும் குறிப்புகளின் அடிப்படையில் அந்த நபர்களிடமிருந்து பணத்தினை வசூல் செய்து வைக்கிருப்பேன் என்றும். மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் அடுத்து வரும் பணி நாட்களில் பணி முடிந்து வீட்டிற்கு செல்லும்போது, அலுவலகத்திற்கு வெளியே பணத்தினை தன்னிடமிருந்து பெற்றுக்கொண்டு செல்வார் என்றும், அதுபோன்று. 08.08.2024-ம்தேதி மோட்டார் வாகன ஆய்வாளரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட வாகனங்களின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்து பணத்தினை வசூல் செய்து தான் பணத்தினை வைத்துள்ளதாகவும். அதன்படி 08.08.2024-ம்தேதியிட்ட துண்டு சீட்டில் உள்ள விவரங்களின்படி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு கொடுக்க வேண்டிய பணத்தில் ரூ.10,950/-யை தனது பாக்கொட்டில் வைத்துள்ளதாகவும். ரூ.1,000/- காலை மற்றும் மதியம் உணவிற்காக செலவு செய்ததுபோக. மீத பணத்தை ஒரு பேப்பரில் சுற்றி தன்னுடைய Maruti Swift பதிவு எண்.TN 21 BY 0635 கொண்ட காரில் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதன்படி அவருடைய காரினை குழுவினர் உதவியுடன். மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் சோதனை செய்தபோது காரில் முன்னிருக்கையில் ஒரு பேப்பரில் சுற்றி பணம் வைக்கப்பட்டிருந்தது, அதில் (500x235=1,17,500/-, 200x28=5,600/-, 100x7=700/-) மொத்தம் ரூ.1,23,800/- இருந்தது. அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. காரின் பின்புற இருக்கையில்

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

இருந்த கருப்பு நிற பேக்கை சோதனை செய்தபோது, அதில் சில தாள்கள் இருந்தன. அதனை பார்வையிட்டபோது, அதில் 08.07.2024, 10.07.2024, 11.07.2024, 12.07.2024, 15.07.2024, 16.07.2024, 18.07.2024, 19.07.2024, 22.07.2024, 23.07.2024, 24.07.2024, 25.07.2024, 26.07.2024, 30.07.2024, 31.07.2024, 01.08.2024, 02.08.2024, 05.08.2024, 06.08.2024, 07.08.2024 (மொத்தம் 24 பக்கங்கள்) ஆகிய தேதிகளை குறிப்பிட்டு எந்தெந்த பிரிவுகளின் கீழ், யார் மூலமாக விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்பட்டுள்ள என்ற குறிப்புகள் காணப்பட்டன. மேற்படி தாள்களில் Data Entry Operator திரு.ருகேஷ் அவர்களால் எழுதப்பட்ட குறிப்புகளும் காணப்பட்டன. மேற்படி 24 பக்கங்கள் உள்ள பேப்பர்கள் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. காரின் டிக்கியை சோதனை செய்தபோது, அதில் JAI GURU JEWELLERS கட்டப்பை ஒன்று இருந்தது. அதனை சோதனை செய்தபோது, அதனுள் With Best Wishes லேபிள் ஒட்டப்பட்ட வைலட் கலர் கிப்ட் பேக் பேப்பரால் சுற்றப்பட்ட கிப்ட் பேக் ஒன்றும், Jai Guru Jewellers-ன் Tax invoice திரு.பரணி அவர்களின் பெயரில் இருந்தது. அந்த Tax Invoice-ல் 224.910 கிராம் எடையுள்ள SL Vigraham ரூபாய்.21,544/-க்கு 05.07.2024-ம்தேதி வாங்கப்பட்டுள்ளது. அந்த கிப்ட் பேக்கினை பிரித்து பார்த்தபோது அதனுள் வெள்ளி முருகர் சிலை ஒன்று இருந்தது. அது குறித்து திரு.பரணி அவர்களிடம் விசாரிக்க, அவர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் சொன்னதின்பேரில் மேற்படி வெள்ளி முருகர் சிலையினை ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் உரிமையாளர்கள் தன்னுடைய Gpay பணத்திற்கு அனுப்பி வைத்திருந்த பணத்தைக்கொண்டு வாங்கி வைத்திருந்ததாகவும், இன்று மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கிப்டினை கொடுப்பதற்காக காரின் டிக்கியில் வைத்து கொண்டு வந்திருந்ததாகவும் தெரிவித்தார். இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கேட்டபோது, எனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். விசாரணைக்காக 224.910 கிராம் எடையுள்ள வெள்ளி முருகர் சிலை மற்றும் 05.07.2024 தேதியிட்ட Tax Invoice அசல், With Best Wishes லேபிள் ஒட்டப்பட்ட வைலட் கலர் கிப்ட் பேக் கவர்-1 மற்றும் JAI GURU JEWELLERS கட்டப்பை ஒன்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.பரணி அவர்கள் பயன்படுத்தும் Redmi செல்போனை அவர் மூலமாக திறந்து 8248132990 எண்ணிற்கான Gpay கணக்கின் பண பரிவர்தனைகளில் சிலவற்றை ஆய்வு செய்தபோது ஆனந்தன் பெரியதம்பி என்ற

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

பெயருக்கு 06.04.2024-ம்தேதி ரூ.50,000/- & ரூ.10,000/- 12.07.2024-ம்தேதி ரூ.50,000/-, 30.07.2024-ம்தேதி ரூ.50,000/- & ரூ.45,000/- பணம் அனுப்பப்பட்டிருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது திரு.பரணி அவர்கள் புதியதாக இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களை விற்பனை செய்யும் டீலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளருக்கு கொடுக்கவேண்டிய பணத்தினை தன்னுடைய Gpay கணக்கு எண்ணிற்கு அனுப்பி வைப்பார்கள் என்றும், அதனை மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.இராஜராஜேஸ்வரின் அவர்களின் உத்தரவின்பேரில் அவரது கணவர் திரு.ஆனந்தன் பெரியதம்பி என்பவரின் செல்போன் 7639419794 என்ற Gpay எண்ணிற்கு அனுப்பியதாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கேட்டபோது, எனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் கையிறுப்பு பதிவேட்டினை பார்வையிட்டபோது உதவியாளர் திருமதி.கோமதி அவர்களிடம் கையிறுப்பாக ரூ.360/- என இருந்தது. அவருடைய பர்ஸை சோதனை செய்தபோது ரூ.100/- மட்டும் இருந்தது. மீதி பணம் குறித்து கேட்டக பழங்கள் வாங்கியதாக தெரிவித்தார். ரூ.100/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் உதவியாளர் திரு.வரபிரசாதரெட்டி அவர்கள் கையிறுப்பாக ரூ.80/- என பதிவு செய்யப்பட்டிருந்தது அவரை திரகசோதனை செய்தபோது அவருடைய சட்டை பாக்கெட்டில் ரூ.80/- இருந்தது. அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு.பாஸ்கர் அவர்கள் இன்று ஒரு நாள் தற்செயல் விடுப்பு சென்றுள்ளதாக திருமதி.கோமதி அவர்கள் தெரிவித்தார். இன்று 13.08.2024-ஆம் தேதி 81 இருச்சக்கரவாகனங்களும், நான்கு சக்கரவாகனம் லாரி-2, லோடு ஆட்டோ-2, கார்-3, டிராக்டர்-1 மற்றும் பயணிகள் ஆட்டோ-1 ஆகியவற்றினை ஆய்வு செய்ததாக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் தெரிவித்தார். மேலும், வழக்கு விசாரணைக்காக ஆகஸ்ட்/2024 மாதத்திற்கான வருகை பதிவேடு மற்றும் தனிநபர் கையிறுப்பு பதிவேடு நகல் எடுத்து கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வின்போது எடுக்கப்பட்ட பொருட்கள் அந்தந்த இடத்திலேயே வைக்கப்பட்டும், அலுவலகத்திற்கும், அலுவலகத்திலிருந்த கோப்புகள் மற்றும் பொருட்களுக்கும் எந்தவித சேதாரம் இன்றி சோதனை செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கையை ஒரு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையாக, நான் சொல்ல சொல்ல தலைமை காவலர் 12315 திரு.மணிகண்டன் அவர்களால், காவல் ஆய்வாளர் கொண்டுவந்த மடிக்கணிணி மூலம் தட்டச்சு

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL U/s. 106 BNSS r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டது. இந்த திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையானது. இன்று 13.08.2024-ஆம் தேதி மாலை சுமார் 15.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. Sdxxx 1)திருமதி.S.இராஜராஜேஸ்வரி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I. (கூடுதல் பொறுப்பு) மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், இலட்சுமாபுரம். திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம். 2) திரு.S.ருகேஷ், வயது-28, த/பெ.ரவிசந்திரன், கேமராமேன், மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், இலட்சுமாபுரம், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம். 3) திரு.S.பிரகாஷ், வயது-21, த/பெ.சிவலிங்கம், Data Entry Operator, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம். 4) திரு.S.பரணி, வயது-52, த/பெ.சுப்பிரமணி, ஓட்டுநர் பயிற்சியாளர், ஷீபா ஓட்டுநர் பயிற்சி பள்ளி, திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம். 5) திருமதி.J.கோமதி, உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், இலட்சுமாபுரம், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம். 6) திரு.V.வரபிரசாதரெட்டி இளநிலை உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், இலட்சுமாபுரம், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம். 7) திருமதி.S.மாலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர், 8) திரு.மு.இ.இராமசந்திரமூர்த்தி, காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர், 9) திரு.D.நாச்சிமுத்து, துணை வட்டாச்சியர்/கண்காணிப்பாளர், நில எடுப்பு (CPPR Unit-2) திருவள்ளூர் மற்றும் (கூடுதல் பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்.

**Honoured Sir,**

I received the above Complaint and Proceedings with seized un-accounted bribe money and seized attested copy of documents and registered a case in Thiruvallur V&AC, Cr.No.13/AC/2024/TVL, U/s. 106 BNSS r/w. 7 & 12 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 on 14.08.2024 at about 04.00 hrs. The original FIR, Complaint along with the Joint Surprise Check Proceedings of District Deputy Inspection Cell Officer, Statements, Self explanations, attested copy of office records and seized un-accounted/un-explained bribe amount Rs.1,46,250/- (through Form-91) at Thirutani Motor Vehicle Inspector Unit Office, Laxmapuram, Thiruvallur District during the Joint Surprise Check, are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and other copies are forwarded to superior officers concerned on 14.08.2024 at about 06.00 hrs.

S. Mala 14/8/2024.

**(S.MALA)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruptiion,
Thiruvallur.